**அ.வ.எண்.129/2023**
**வா.சா.1 : ராமாயி**
**தேதி : 09.02.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>6, 7, 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

என் அண்ணன் பழனியப்பனுக்கு குழந்தைகள் பிறப்பதற்கு முன்பே என் தகப்பனார் இறந்துவிட்டார். வழக்கு சொத்துக்கான விவரங்கள் என் ஊர்க்காரர்கள் சொன்னார்கள். 9ம் பிரதிவாதி சின்னப்பிள்ளை என்ற சிவகாமிக்கு தாவா தாக்கல் செய்த சமயத்திலேயே 75 வயது என்று தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். உங்கள் அண்ணன் பழனியப்பனுக்கு முதலில் திருமணமானது என்றும் பின்னிட்டு பாப்பாயிக்கு உள்ளூரிலேயே திருமாணமானது என்றும் குழந்தாயிக்கு மனவாடியில் திருமணமானது என்றும் இறுதியாக எனக்கு ஏழூரில் திருமணம் ஆனது என்று சொன்னால் சரிதான். என் தகப்பனார் இறக்கும்போது எனக்கு 4 வயது குழந்தை. நான் என் அப்பாவையும், தாத்தாவையும் பார்க்கவில்லை. எனக்கு வயது 87. நீங்கள் வழக்கிற்காக 50 வருடத்திற்கு முன்பாக உங்கள் தந்தை இறந்ததாக தவறாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் சர்வே எண். காட்டு பெயர் எனக்கு தெரியாது. தாவா சொத்து காளியப்பனூரில் உள்ளது. காளியப்பனூரில் தாவா சொத்து எங்குள்ளது என்றால் கலெக்டர் ஆபீசுக்கு கிழக்கில் உள்ளது. சர்வே எண் தெரியாது. தாவா சொத்தை பெரிய தோட்டம் என்று சொல்வார்கள். தாவா சர்வே 1 மற்றும் 6 இன சொத்துக்களை கூனம்காடு என்று சொல்வார்கள். மேற்சொன்ன கூனம்காடானது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வரும் தென்வடல் ரோட்டிற்கு கிழக்கிலும், காளியப்பனூர் செல்லும் கிழமேல் ரோட்டிற்கு தென்புறத்திலும் அமைந்துள்ளது அங்கு சுமார் 150 வீடுகளுக்கு மேல் தற்போது உள்ளது. காளியப்பனூரோ மேற்சொன்ன இரண்டு அயிட்ட சொத்துக்களில் தான் அமைந்துள்ளது. தாவா சொத்தில் வீடு கட்டி இருக்கும் நபர்களை இந்த வழக்கில் கட்சி

சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா 1 வது அயிட்ட சொத்து என் அண்ணனுக்கு விட்ட காடு. அதை என் அண்ணன் விற்றுவிட்டார். தற்போது உங்கள் சகோதரர் விற்ற 1வது அயிட்ட சொத்தை கங்கா நகர் என்று மனைப்பிரிந்து அதில் நிறைய வீடுகள் உள்ளது அதில் இருக்கும் நபர்களை கட்சி சேர்க்கவில்லை. அதற்கு எந்த காரணமும் இல்லை. என் அண்ணன் தாவா சொத்துக்களில் சரியாக விவசாயம் இல்லாததாலும் கடனாளி ஆகிவிட்டார் என்றால் சரிதான் மேலும் குடிப்பழக்கமும் உண்டு. உங்கள் அண்ணனுக்கு ஒரு சொத்தும் இதர சொத்துக்களையும் கடன்களையும் அவரது மகன்களுக்கும் 19.04.1962 ல் பத்திரம் எழுதி பிரித்துக்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான் தெரியாது. உங்கள் அண்ணன் வாங்கிய கடன்களை உங்கள் தாயாரும், சகோதரர்களின் மகன்களும் சேர்ந்து சொத்துக்களை அடமானம் வைத்தும், விற்றும் கடன்களை கட்டி தீர்த்தார்கள் என்று சொன்னால் சரிதான். தாவா 9வது அயிட்ட சொத்தில் பாலமரத்து கருப்பண்ணசாமி கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன கோவிலுக்கு என் சகோதர், சகோதரரின் மகன்கள் தானம் கொடுத்துள்ளார்கள். தாவா 14வது அயிட்ட சொத்தை மோளக்காரன் காடு என்று அழைப்பார்கள். அதை கவுன்சிலர் வேலுசாமி என்பவருக்கு 07.01.2010 லேயே விற்றுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான் விற்றது போக மீதி நிலமும் உள்ளது. தாவா 8, 10, 11, 12 அயிட்ட சொத்துக்கள் முழுவதும் மற்றும் தாவா அயிட்ட 9, 16 சொத்தில் பகுதியளவை 27.01.1964 ல் ஸ்ரீரங்க கவுண்டருக்கு விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான் என் தாயார் இருக்கும்போதே விற்றுள்ளார்கள். ஸ்ரீரங்ககவுண்டரின் 4 மகன்களும் பாகம்பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். தாவா 8, 10, 11, 12 அயிட்ட சொத்துக்கள் முழுவதும் மற்றும் தாவா அயிட்ட 9, 16 சொத்தில் ஒரு பகுதியில் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்ட பல நபர்களுக்கு விற்கப்பட்டுள்ளது என்று

சொன்னால் சரிதான். கவுன்சிலர் வேலுசாமி, ஸ்ரீரங்ககவுண்டரின் வாரிசுகள், அவரிடமிருந்து கிரையம் பெற்ற கிரையதாரர்கள் மற்றும் பாலமரத்து கருப்பண்ணசாமி கோவில் டிரஸ்டிக்களை இந்த வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதற்கு குறிப்பிட்ட காரணமும் இல்லை என்றால் சரிதான். 19.03.2002 ஆம் தேதியில் தாவா 4, 5 அயிட்ட சொத்தில் ஒரு பகுதியினை 12ம் பிரதிவாதிக்கு விற்றுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். தாவா 7வது அயிட்ட சொத்தில் சர்வே எண்.690 ல் கிழபுற பங்கு பாலுசாமிக்கும் மேல்புற பங்கு துரைசாமிக்கும் பாத்தியம் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன சர்வே எண்.690 ல் 38–1/4 செண்ட்டை அண்ணாதுரையின் வாரிசுகள் கௌசல்யா, நதியா 6, 8 பிரதிவாதிகள் 15ம் பிரதிவாதிக்கு விற்றுள்ளார்கள் என்று சொன்னால் அது பற்றி தெரியாது. தாவா 4 அயிட்ட சொத்தை 8ஆம்பிரதிவாதி 13ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார் என்று சொன்னால் தெரியாது. சர்வே எண்.702 தாவா 15வது அயிட்ட சொத்தை உங்கள் சகோதரரின் மகன்கள் மற்றும் அவரது வாரிசுகள் லீலாபழனிச்சாமிக்கும், 14ஆம் பிரதிவாதிக்கும் விற்றுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான் விற்பனை செய்தது பற்றி தெரியாது. உங்கள் தாயார், உங்கள் சகோதரர், சகோதரரின் வாரிசுகள் ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்ற 12 முதல் 15 வரையுள்ள பிரதிவாதிகள் மற்றும் ஸ்ரீரங்ககவுண்டர், பத்மாவதி டெக்ஸ், வேலுச்சாமி, லீலாபழனிச்சாமி மற்றும் கிரையம் பெற்றவர்கள் அவரவர் கிரையம் பெற்ற தேதியிலிருந்து இன்று வரை அனுபவித்தில் உள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். தாவா 1 மற்றும் 6 வது அயிட்ட சொத்துக்களை உங்கள் சகோதரர் மற்றும் சகோதரர் மகன்கள் 60 ஆண்டுகளுக்கு முன்பாகவே விற்றுவிட்டார்கள் என்றும் மேலும் அதில் உங்கள் சகோதரர் மற்றும் சகோதரர் மகன்கள் சுவாதீனத்தில் இல்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் தரிசு என்றால் சரிதான்

அதில் பெரிய விவசாயம் எதுவும் செய்வதில்லை. தாவா சொத்துக்களில் பாடுபாட்டு தான் உங்களுக்கும் உங்கள் சகோதரிகளுக்கும் உங்கள் சகோதரர்கள், தாயார் திருமணம் செய்து வைத்தார்கள் என்று சொன்னால் சரிதான். உங்களுக்கும் உங்கள் சகோதரிகளுக்கும் உங்கள் சகோதரர்கள், தாயார் திருமணம் செய்து வைத்ததால் தான் கடனாளி ஆகிவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான் அவர் மது அருந்தியதாலும் கடனாளியாகிவிட்டார்கள். 19.04.1962 ஆம் தேதியிலிருந்தே உங்கள் அண்ணனுக்கு பாகம் கொடுத்த சொத்தினை உங்கள் அண்ணன் அனுபவித்து விற்றுவிட்டார் என்றும் உங்கள் அண்ணன் மகன்கள் அனுபவித்த சொத்துக்களை அவர்களும் விற்றுவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான். 19.04.1962 ஆம் தேதிக்கு பின்னிட்டு அவரவரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல அது என் தாயாரின் சொத்து. மேற்சொன்ன சொத்து உங்கள் தாயார் சொத்து அல்ல என்றும் உங்கள் அண்ணன் மகன்களான பாலுசாமி, துரைசாமியின் தனிப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்றும் அதில் உங்களுக்கு பாகம் உள்ளது என்றும் அதில் நீங்கள் கூட்டு அனுபவித்தில் உள்ளதாகவும் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் நீங்கள் எந்த காலத்திலும் சுவாதீனத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் சகோதரர் பழனியப்பனும், அவர் மகன் அண்ணாதுரையும் உங்களுடைய மற்றும் உங்கள் சகோதரிகளின் நலனுக்காக மேற்பார்வை செய்து வருமானத்தில் பங்களித்தார்கள் என்று வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் அண்ணனுக்கும் அண்ணனின் மகன்களுக்கும் இடையே ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டின் படி வழக்குச்சொத்துக்கள் பிரிந்தது தவறு என்று வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

குடும்ப ஏற்பாட்டிற்கு பிறகு உங்கள் அண்ணன் மற்றும் அவரின் வாரிசுகள் ஏற்படுத்திய கிரையம் உள்ளிட்ட மாற்றாக்கங்கள் உங்களை கட்டுப்படுத்தாது என்று வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் அண்ணன் மற்றும் அவரது வாரிசுகளிடம் கிரையம் பெற்றவர்கள் நல்லெண்ணத்துடன் தக்க மறுபயனுக்கு கிரையம் பெற்று அவரவர் கிரையம் பெற்ற தேதியிலிருந்து இன்று வரை அனுபவித்தில் இருந்து அவரவர்கள் செய்த மாற்றாக்கங்கள் சட்டப்படி பாதுக்காக்கப்பட வேண்டியவை என்று சொன்னால் சரியல்ல. தாவா 2 முதல் 16 வரையிலான அயிட்ட சொத்துக்கள் உங்கள் அண்ணன் மகன்களின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் சட்டப்படி நீங்கள் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக கருத இயலாது என்றும் பங்கும் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. மேலும் காலதோஷத்தால் தாவா பாதிக்ப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.  பாலுசாமி மற்றும் அண்ணாதுரையின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் தான் வருவாய்துறையில் அவர்கள் பெயரில் பெயர் மாற்றம் ஏற்பட்டு அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் என் சகோதரிகளுக்கும் 1989 ஆம் ஆண்டிற்கு முன்பே திருமணமாகிவிட்டது.  உங்கள் அண்ணன், அண்ணனின் வாரிசுகளால் ஏற்படுத்தப்பட்ட  தாவா பூமி குறித்த  ஆவண மாற்றாக்கங்கள் இந்து வாரிசுரிமை திருத்தச்சட்டம் 2005 அமலுக்கு வருவதற்கு முன்னரே ஏற்பட்டதால் அது குறித்து நீங்களோ உங்கள் சகோதரிகளோ, பாலுசாமியின் சகோதரிகளோ அவர்களின் வாரிசுகளோ யாருமே கேள்வி கேட்க உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 19.04.1962 லிருந்து நீங்கள் தாவா சொத்திலிருந்து  உடைமை நீக்கம் செய்யப்பட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. அண்ணாதுரையும், பாலுசாமியும் 23.11.2007 ல் தாவா சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் அது பற்றி தெரியாது.

அண்ணாதுரையின் வாரிசுகளும், 10ம் பிரதிவாதி பாலுசாமியின் வாரிசுகளும் 30.01.2020-ல் தாவா 7வது அயிட்ட சொத்தை பொறுத்து பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் தாவா சொத்தில் கூட்டாக அனுபவித்தில் இல்லாததால் நீங்கள் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. தாவா 13, 14 அயிட்ட சொத்துக்களின் விஸ்தீரணம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கிற்கு எந்த வழக்குமூலமும் இல்லை என்றும் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 19.04.1962 தேதியில் உங்கள் சகோதரர் பழனியப்பனுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் 19-1/2 ஏக்கர் என்று சொன்னால் தெரியாது. நீங்கள் தாவாவில் 44-1/2 ஏக்கருக்கு காண்பித்துள்ளீர்கள் என்றும் அது குறித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 19-1/2 ஏக்கரைத்தவிர மீதியுள்ள அனைத்து சொத்துக்களும் உங்கள் குடும்பத்திற்கு பாத்தியமில்லாதது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் விற்ற தேதியன்றே உங்களுக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக மே 2022 ல் தெரிய வந்ததாக தவறாக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் சகோதரரின் மகன் துரைசாமி என்ற அண்ணாதுரைமீது ஒரு நவமணி என்பவர் நொடிப்பு மனு 32/2016 சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்றும் அதனை 6, 7, 8 பிரதிவாதிகள் அதனை பெரிய தொகை கொடுத்து தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 7ம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 6, 8 பிரதிவாதிகளுக்கு 08.02.2016 ஆம் தேதியில் விடுதலை செய்து கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

**12 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா 4, 5 அயிட்ட சொத்துக்களின் ஒரு பகுதியினை உங்கள் அண்ணன் மகன் அண்ணாதுரை மற்றும் பாலுசாமி ஆகியோர் 30.05.1997 ல் ஒரு பொது அதிகார பத்திரம் மூலம் தங்கவேலை அவர்களது முகவராக நியமித்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. தாவா 4, 5 அயிட்ட சொத்துக்களின் ஒரு பகுதியினை உங்கள் அண்ணன் மகன் அண்ணாதுரை மற்றும் பாலுசாமி ஆகியோர் 19.03.2002– ல் பிரதிஉபகாரம் பெற்று ஒரு பொது அதிகார முகவர் தங்கவேல் மூலமாக விற்றுள்ளார்கள் என்றால் தெரியாது. தாவா 4, 5 அயிட்ட சொத்துக்களின் ஒரு பகுதியினை உங்கள் அண்ணன் மகன் அண்ணாதுரை மற்றும் பாலுசாமி ஆகியோர் 14.12.2022 அன்று 12 ஆம் பிரதிவாதி பாலசுப்பிரமணி, சரவணன், அர்ச்சுனன் ஆகிய மூன்று பேரும் பிரதி பிரயோஜனம் பெற்று விற்றுவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. பாலசுப்பிரமணி, சரவணன், அர்ச்சுனன் ஆகியோர் 12 ம் பிரதிவாதியிடமிருந்து தாவா தாக்கல் செய்வதற்குமுன்பே கிரையம் பெற்றுள்ளார்கள் என்றும் ஆகையால் அவர்களை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்காததால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல வாங்கிய நபர்கள் எனக்கு 5–1/2 லட்ச ரூபாய் கொடுப்பதாகவும் அதற்காக கையெழுத்து போடுமாறும் 7 மாதத்திற்கு முன்பு கேட்டார்கள். மேற்சொன்னவாறு பணம் கொடுப்பதாக சொன்னார்கள் என்று நீங்கள் வழக்கிற்காக கூறுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**15 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் நான் தான் மனு செய்து நகல்களை வாங்கினேன். வா.சா.ஆ.2 முதல் 8 வரையிலான ஆவணங்கள் ஏற்பட்ட தேதியில் அவைபற்றி எனக்கு தெரியாது. வில்லங்க சான்றிதழ் பார்த்து தெரிந்துகொண்டேன். 1962 ல் ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டில்

வில்லங்கம் பார்த்து தெரிந்து கொண்டேன். 15 ஆம் பிரதிவாதி 03.02.2021 அன்றே அவர் கிரையம் பெற்ற தாவா 7 வது அயிட்ட சொத்தில் உள்ள மனைப்பிரிவினை பழமலைக்கவுண்டர் குமாரர் சின்னசாமி, நாச்சியப்பன் குமாரர் முருகேசன், சிவசாமி அவர்களின் மனைவி அமுதா ஆகியோர்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றும் அந்த கிரைய விவரமும் உங்களுக்கு வழக்கு முன்பே தெரியும் என்றும் வேண்டும்என்றே மேற்படி சின்னசாமி வகையறாவை சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1956 க்கு முன்பே உங்கள் தகப்பனார் இறந்துவிட்டதால் உங்களது சகோதரர் மற்றும் அவரது இளவர் குழந்தைகளுக்கு ஏற்பட்ட 19.04.1962 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட பத்திரத்தினை பொறுத்து தற்போது நீங்கள் கேள்வி கேட்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கு அடிப்படையிலேயே நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்து வாரிசுரிமை சட்டம் 1956 க்கு முன்பே உங்கள் தகப்பனார் இறந்துவிட்டதால் மேற்படி சட்டம் உங்களுக்கு பொருந்தாது என்று சொன்னால் சரியல்ல. கிரையம் செய்தவர்களை தெரிந்துகொண்டே அவர்களை தரப்பினர்களாக சேர்க்காததால் தாவா வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.09 17:46:01 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.